# 4 இறைவனின் தீர்வு

**யோவான் 2 : 1-11**

## கானாவில் திருமணம் - அரும் அடையாளம்

யூத சமூகத்தில் திருமண விழாவுக்கு விசேட இடம் கொடுக்கப்பட்டது. யூதர் திருமண விழாவை ஏழு நாட்கள் கொண்டாடுவர். இந்த ஏழு நாட்களும் தமது பாரம்பரியங்களை நிறைவேற்றி மகிழ்வடைவதில் மணவாளனும் மணவாட்டியும் கலந்துகொள்வர். இந்த ஏழு நாட்களும் திருமண விழாவில் கலந்து கொள்ளும் அனைவர்களினதும் தேவைகளை நிறைவேற்றுதல் வேண்டும். குறைவுபடின் அவர்களுக்குச் சமூகத்தில் அவமான நிலை உருவாகும். இதனால் இந்த ஏழு நாட்களும் விழாவைக் கொண்டாடி விருந்தாளர்களை உபசரிப்பது யூதரின் வழக்கமாக இருந்தது.

இயேசுவும் அவருடைய சீடரும் அவருடைய தாயாரும் கலிலேயாவில் உள்ள கானா ஊர் திருமணத்திற்கு அழைப்பு பெற்றனர். அங்கு இடம் பெற்ற சிறப்பான நிகழ்வை ஆராய்வோம்.

**வாசிப்போம்**
**யோவான் 2:1-11**

கானாவில் திருமணம் குறித்து யோவான் நற்செய்தி நூலில் மாத்திரமே குறிப் பிடப்பட்டுள்ளது. இதனை யூதர் முக்கிய நகரமாக கவனத்தில் கொள்ளாதிருந்தனர். இவ்வாறான நகரை இயேசு தனது முதல் அரும் அடையாளத்தைச் செய்வதற்காகத் தெரிவுசெய்தது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான திருமண வைபவத்தில் திராட்சைரசம் குறைவுபட்டது. யூத திருமணத்தில் இவ்வாறான பிரச்சினை ஏற்படும் வேளையில் திருமணத்துடன் தொடர்பானவர்கள் எதிர்நோக்கும் நிலையைக் கண்ட இயேசுவின் தாயார் இயேசுவிடம் அதனை அறிவித்தார்.

ஏற்பட்ட அந்நிலையினால் ஏற்படும் அவமானத்தில் இருந்து விடுவிக்க இயேசு தமது முதல் அரும் அடையாளத்தை அதாவது முதல் அற்புதத்தை செய்தார். ஆறு கல் தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள் என்று தமது சீடர்களுக்கு கூறினார். அவற்றைப் பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டு போங்கள் என்றார். அப்போது தண்ணீர் திராட்சைரசமாக மாறியிருந்தது.



**உரு 4.1 கானா ஊர் திருமணம்**

கானாவில் திருமணத்தில் இயேசுவால் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என மரியா விசுவாசித்தாள். தனது மகன் இறைமகன் என அவர் அறிந்திருந்தார். அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என பணியாளரிடம் கூறினார். மரியா விசுவாசம் உடையவளாக இருந்தது மாத்திரமல்ல பணியாளரிடமும் இயேசுவைக் குறித்த விசுவாசத்தைக் கட்டியெழுப்பினார்.

நாம் வாழும் சமூகத்தில் குறைவுகளில் இறைமகன் இயேசுவில் விசுவாசம் வைத்து அவரது ஆசியை எதிர்பார்த்து வாழ மரியா முன்னுதாரணமாகச் செயற்பட்டார்.

வாழ்வின் அனைத்துத் தேவைகளிலும் இயேசுவை அழைத்து அவருடன் இணைந்து வாழ இடமளித்தல் இறை பிள்ளைகளின் பொறுப்பாகும். அவர் எவ்வேளையிலும் பெரிய, சிறிய எல்லோரினதும் அழைப்பை ஏற்றுக்கொள்கின்றார். அவர் எம்முடன் வாசம் செய்வதால் எமது வாழ்வில் ஒளியும் சக்தியும் கிடைக்கின்றது.

அவ்வாறே, வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென இந் நிகழ்வு எமக்குக் கூறுகின்றது. திராட்சைரசம் குறைவுபட்டதைக் கண்ட

மரியா இயேசுவிடம் அறிவித்தபோது, இயேசு ''அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே'' என்றார். உலக வாழ்வின் செயல்களில் கவலைப்படாது இறைமகனாகிய இயேசுவில் விசுவாசம் வைக்க தமது தாயை ஈடுபடுத்தி இயேசு செயற்பட்ட விதம் சிறப்பானதாக அமைகின்றது.

**நாம் மரியாவைப் போன்று,**

- எமது வாழ்வின் பிரச்சினைகளை இயேசுவிடம் கொண்டு செல்வோம்.
- எமது வாழ்வின் பிரச்சினைகளில் கலக்கம் அடையாது இறைமகன் இயேசுவை விசுவாசித்து வாழ்வோம்.
- இயேசுவில் விசுவாசத்துடனும் கீழ்ப்படிவுடனும் செயற்பட்டு அவர் எமது வாழ் வில் அடையாளங்களைச் செய்ய இடமளிப்போம்.

மரியாவின் செயற்பாடுகளை ஆராய்ந்த நாம், அத்திருமண வைபவத்தில் பணி யாளர்களின் செயற்பாடுகளையும் ஆராய்வோம்.

அந்த இடத்தில் யூதரின் தூய்மை செய்யும் பாரம்பரியம் தொடர்பாக ஆறு கல் தொட்டிகள் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும். பாரம்பரிய சடங்குகளுக்கு முக்கிய இடமளித்த யூதர், தமது தூய்மை மற்றும் புனிதத்துவத்தில் கவனம் செலுத்தி வந்தனர். எந்தவொரு யூத வீட்டுக்குள் நுழைந்தவுடன் பணியாளர் விருந்தினரின் பாதங்களைக் கழுவுதல் யூதரின் பாரம்பரிய பழக்கம் ஆகும். அதேபோன்று கைகள், பாத்திரங்கள் என்பவற்றைக் கழுவ வேறாகத் தண்ணீர் நிரப்பப்பட்ட தொட்டிகள் காணப்பட்டன. பணியாளர் அவற்றை ஆயத்தம் செய்துவைப்பார். பணியாளர் இயேசு கூறியவாறு தொட்டிகளில் நீரை நிரப்பியவேளை புதுமையான அரும் அடையாளம் இடம்பெற்றது. இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து செயற்பட்டமையால் அவர்கள் அரும் அடையாளத்தைக் கண்டனர். வெறுமையான ஆறு கல் தொட்டிகளில் தண்ணீரை நிரப்பி (அதாவது 600 லீட்டர்) பணியாளர் கீழ்ப்படிவின் நன்மையைப் பெற்றனர். இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென இந்நிகழ்வு எமக்கு வழிகாட்டுகின்றது. இதனால் மகத்தான ஆசிகள் வரும். இயேசு இந்தத் தேவையின்போது அரும் அடையாளத்தைச் செய்தார். எந்தவொரு பிரச்சி னைகளையும் அவரால் தீர்க்க முடியுமென்பதை இதன் மூலம் இயேசு காட்டினார்.

இயேசு கானாவில் திருமணத்தில் இருந்தவேளை ஏற்பட்ட சிக்கலை இலகுவாகத் தீர்த்து வைத்தல் புதுமையானது. ஆறு கல் தொட்டிகளை நிரப்பிய பணியாளரும் மேற்பார்வையாளரும் இறை வாசகத்தை அனுபவத்தில் கண்டனர். அவருடைய சீடரும் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

நாம் இறைவல்லமையை அனுபவித்து பிறரும் அதனை அனுபவிப்பதற்கு வழி அமைக்கும் ஊற்றாக செயற்பட வேண்டுமென இறைவன் எம்மிடம் எதிர்பார்க் கின்றார். அப்போது எமது ஆன்மீக வாழ்வு மாற்றமடையும்.

எமது வாழ்வில் இயேசு வல்லமையானவைகளைச் செய்வதற்குக் கீழ்ப்படிவுடன் நாம் இடமளித்தால் ஆன்மீக அனுபவத்தைப் பெற எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். இங்கு அவர்கள் இறை பிரசன்னம் மற்றும் இறை சமீபம் இருப்பதைக் கண்டனர்.

எமது நாளாந்த வாழ்வில் இறை பிரசன்னத்தை நாம் அனுபவிக்கும்போது எமது ஆன்மீக வாழ்வு பூரணமடையும். இறைவனின் திட்டத்திற்கு ஏற்ப மிக உயர்வான வற்றையும் நல்லவற்றையும் அவர் எமது வாழ்வில் செய்து வருகின்றார். அப்போது முன் இருந்தவற்றை விட பெறுமதி மிகுந்தவற்றை எம்மால் கண்டு கொள்ள முடியும்.

இயேசு கானாவில் திருமணத்தில்,

1. தண்ணீரை திராட்சைரசமாக்கியதன் மூலம் அரும் அடையாளத்தைச் செய்தார்.

2. இறைவனின் மகத்தான வல்லமை இயேசுவிடம் காணப்பட்டது.

3. திருமண தம்பதிகள் உலக போக்கிலான அவமானத்திலிருந்து பாதுகாக்கப் படைந்தனர்.

4. பணியாளரின் கீழ்ப்படிதல் புலப்படுகின்றது.

5. இறைவனின் கருணையால் சிக்கல் தீர்க்கப்பட்டதை அறியலாம்.

6. சீடர்களின் நம்பிக்கை வளர்ச்சி அடைந்தது.

7. மரியா மற்றும் சீடர்களின் பணியாளரின் திருமண வீட்டின் தேவை நிறை வேற்றப்பட்டது.

வாழ்வின் பல்வேறு தேவைகளில் இறை பிரசன்னத்தை அனுபவித்து, இயேசுவிடம் வர இன்றும் எம்மை அவர் அழைக்கின்றார். அந்த ஆசியைப் பெற்று பிறருடன் இணக்கத்துடன், பிறரின் தேவைகளில் உதவி செய்ய முன்வர வேண்டுமென அவர் கிறிஸ்தவர்களாகிய எம்மிடம் எதிர்ப்பார்க்கின்றார்.

### செயற்பாடு

1. கானாவில் திருமணத்தில் ஒரு நிகழ்வை உரையாடலாக எழுதுக.

2. கானாவில் திருமண வைபவத்தின் பல்வேறு சம்பவங்களில் இருந்து உமது வாழ்விற்கு நீர் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் ஐந்தினைக் குறிப்பிடுக.